## பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை ரத்துச் செய்திருப்பதை
## சோபா மாடல் அரசு கைவிட்டு தமிழ்நாட்டின் வளர்ச்சி

# இளைஞர்களின் எதிர்காலம் கருதி பணிகளைத் தொடர வேண்டும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!



**சென்னை,ஆக.26-**

**பரந்தூர் விமான நிலைய திட்டம் ரத்து குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான பரந்தூர் விமான நிலையத்திட்டத்தை ரத்து செய்திருக்கும் Sofa Model அரசை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சென்னையில் பெருகி வரும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் விமான சரக்கு போக்குவரத்து எதிர்காலத் தேவை போன்றவற்றின் அடிப்படையில், சென்னைக்கு 2ஆவது விமான நிலையம் அவசியம் என்பதை உணர்ந்து, பரந்தூர் விமான நிலையத் திட்டம் கழக அரசால் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு Airports Authority of India, Union Civil Aviation Ministry உள்ளிட்டவை ஆய்வு செய்து, அனுமதி தந்து விட்டன.

இத்தகைய கடினமான அனுமதிகளைப் பெறுவது, கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குச் சந்தை மதிப்பை விட 3 மடங்கு அதிகமான இழப்பீடு, மறு குடியமர்வு போன்ற முக்கியமான பணிகள் அனைத்தும் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே நடைபெற்றன.

இதற்காக அரசுத் தரப்பில் பெரும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவையெல்லாம் நடந்த பிறகு, அற்ப அரசியல் காரணங்களுக்காக திட்டத்தையே கைவிடுகிறேன் என்று சொன்னால், அது அரசிற்கு பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தும்.

பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை நிறுத்துவதால், சென்னையை சுற்றியுள்ள தொழில் நிறுவனங்கள் அண்டை மாநிலங்களை நோக்கி வெளியேறும் அபாயமும், புதிய நிறுவனங்கள் சென்னைக்கு வர தயங்கும் சூழலும் எழுந்துள்ளன.

ஆகவே, தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தையும் தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, பரந்தூர் விமான நிலைய பணிகளைத் தொடர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். #ParandurAirport

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

# தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி மனுத் தாக்கல் செய்ய அவகாசம்!

## முதலமைச்சர், அமைச்சருக்கு உயர்நீதிமன்றம் எச்சரிக்கை!

சென்னை, ஆக. 26 -

தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி மனுத்தாக்கல் செய்ய அவகாசம் கோரிய முதலமைச்சர் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தரப்புக்கு சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழக முதல்வர் விஜய், பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து, திமுக வேட்பாளர் ஆர்.டி. சேகர் மற்றும் வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இதேபோல் திருச்சி கிழக்கு தொகுதியில், விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் இனிகோ இருதயராஜ் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்குகள் நீதிபதி வி. லட்சுமி நாராயணன் முன் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்ய இருப்பதாகவும், அதற்கு இரண்டு வாரங்கள் அவகாசம் வழங்க வேண்டும் என, முதல்வர் விஜய் தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது.

இதேபோல, ஆதவ் அர்ஜுனா தரப்பிலும் தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்ய இருப்பதாகவும், அதற்கு அவகாசம் வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இரண்டு வார கால அவகாசம் வழங்க மறுத்த நீதிபதி, ஆகஸ்ட் 27 ஆம் தேதி வரை அவகாசம் வழங்கினார்.

அதற்குள் நிராகரிப்பு மனு தாக்கல் செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என முதல்வர் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆகியோருக்கு நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

## தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா தலைமையில்

# ‘வரலாற்றில் கலைஞர்’ நூல் வெளியீட்டு விழா!

## முனைவர் சபாபதி மோகன் வெளியிட்டு சிறப்புரை!





புதுவை, ஆக. 26 -

புதுச்சேரி மாநிலம், இலாசுப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில், தி.மு.க. மூத்த முன்னோடி, கலைமாமணி திருஞானம் எழுதிய வரலாற்றில் கலைஞர் தொடர் நூல் பாகம்-3ன் வெளியீட்டு விழா நீடராஜப்பர் வீதியில் உள்ள தென்றல் ஹாலில் நடந்தது.

இலாசுப்பேட்டை தொகுதி செயலாளர் தியாகராஜன் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர் விக்னேஷ் கண்ணன் முன்னிலை வகித்தார். ராஜ்பவன் தொகுதி செயலாளர் மோகன் வரவேற்று பேசினார்.

தி.மு.க. கொள்கைப் பரப்புச்செயலாளர் முனைவர் சபாபதி மோகன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, வரலாற்றில் கலைஞர் தொடர் நூல் பாகம்-3 என்ற நூலை வெளிட்டு, சிறப்புரை ஆற்றினார். தி.மு.க. அமைப்பாளரும், மேனாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா நூலினைப் பெற்று வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தில்குமார், கார்த்திகேயன், மாநில துணை அமைப்பாளர்கள் அனிபால் கென்னடி, தைரியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் கோபால் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கலைமாமணி சீனு. வேணுகோபால் நூல் அறிமுகவுரை ஆற்ற, புதுச்சேரி பல்கலைக் கழக தமிழ்த் துறை பேராசிரியர் ரவிக்குமார், கலைமாமணி கோவிந்தராசு ஆகியோர் நூல் மகிழ்வுரை வழங்கினர்.

நூலாசிரியர் கலைமாமணி திருஞானம் ஏற்புரை வழங்கினார். தொடர்ந்து நூலாசிரியர் திருஞானம் மற்றும் அவரது துணைவியார் தனலட்சுமி திருஞானம் ஆகியோருக்கு மாநில தி.மு.க. சார்பில் பொன்னாடை அணிவித்தும், பொழ்கிழி வழங்கியும் கவுரவிக்கப்பட்டது.

இந்த விழாவில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் லோகையன், பொதுக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், தங்கவேலு, கோபாலகிருஷ்ணன், அமுதாகுமார், நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் வடிவேல், சக்திவேல், நடராஜன், பாண்டு அரிகிருஷ்ணன், சக்திவேல், இளஞ்செழியப் பாண்டியன், மணிகண்டன், சிவக்குமார்,

ஆறுமுகம், சவுரிராஜன், ராதா கிருஷ்ணன், சத்தியவேலு, இந்திரா நகர் தொகுதி பசுபிக் சங்கர், பொறிஞர் பாலசுப்ரமணியன், தமிழ்ச்சங்க துணைத் தலைவர் திருநாவுக்கரசு, அணிகளின் அமைப்பாளர்கள் செந்தில்முருகன், அங்காளன், அண்ணா அடைக்கலம், சீனு. மோகன்தாசு, டாக்டர் ஆனந்த் ஆரோக்கியராஜ், வீரய்யன், கோதண்டபாணி, சிவசங்கர், காயத்ரி, சுமதி, முகம்மது ஹாலிது, அணித் தலைவர் சந்திரகலா, துணைத் தலைவர்கள் குரு (எ) சண்முகசுந்தரம், ராஜேஷ், பிரிய தர்ஷினி, துணை அமைப்பாளர்கள் அன்பழகன், தேவேந்திரன், சிவதாசன், எழிலரசன், தாமரைக் கண்ணன், தர்மன், அஜிபாஷா, ராமு, ரமேஷ், சிவா, ஜோசப் பிரான்சிஸ், பாலு, தொகுதி நிர்வாகிகள் எம்.எஸ். முரளி, ஸ்ரீஹரி, சசிகுமார், கருணாகரன், முத்து, அகிலன், கிரி, நெல்சன், விஜயகுமார் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கங்களின் கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டம் நேற்று திருச்சியில் உள்ள கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து மண்டல போக்குவரத்து தொ.மு.ச. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கழக அரசின் 100 நாள் சாதனைகளும் விஜய் அரசின் 100 நாள் காட்சியும் !

2021-ல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மே 7-ம் தேதி பொறுப்பேற்ற 100 நாள் ஆட்சி என்ன செய்தது, 2026-ல் விஜய் அவர்களின் 100 நாள் ஆட்சி என்ன செய்கிறது என்று பாருங்கள். உண்மை உங்கள் கண் முன்னே!

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் - சொன்னதை செய்தவர்:**

முதல் நாள் 5 கையெழுத்து - 5-ம் சாதனை!

1. கொரோனா நிவாரண நிதி ரூ.4000 - 2.10 கோடி குடும்பங்களுக்கு இரண்டு தவணையாக வழங்கினார்.

2. ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3 குறைத்தார்.

3. மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் - இன்று வரை 500 கோடி பயணங்களை தாண்டி சாதனை.

4. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டை விரிவாக்கம் செய்தார்.

5. தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை கட்டணத்தை அரசே ஏற்றது.

**100 நாட்களில்:**

6. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை - பிரச்சாரத்தில் பெற்ற 4.57 லட்சம் மனுக்களில் 2.30 லட்சம் மனுக்களுக்கு 100 நாட்களிலேயே தீர்வு.

7. பெட்ரோல் விலை ரூ.3 குறைப்பு.

8. மக்களை தேடி மருத்துவம் திட்டம் கிருஷ்ணகிரியில் தொடக்கம்.

9. அரசுப்பள்ளி மாணவர்களுக்கு பொறியியல், வேளாண்மையில் 7.5% இட ஒதுக்கீடு.

10. 14 மளிகை பொருட்கள் அடங்கிய நிவாரண தொகுப்பு.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொன்னார்: செய்தார்.

**விஜய் - சொன்னதை செய்தாரா??**

1. 6 சிலிண்டர் என்றவர் 3 ஆக்கினார்: எல்லா பெண்களுக்கும் என்றவர், இப்போது ஆண்டுக்கு ரூ.2.5 லட்சம் வருமானத்திற்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டும். திட்டத்தில் 50% வெட்டு.

2. 200 யூனிட் இலவசம் என்றவர் நிபந்தனை வைத்தார்: 500 யூனிட்டுக்கு கீழ் பயன்படுத்தினால் மட்டும் 200 யூனிட் இலவசம். மேல் பயன்படுத்தினால் பழைய 100 யூனிட் தான். 2.30 கோடி இணைப்புகளில் பல லட்சம் பேருக்கு ஏமாற்றம்.

3. 5 ஏக்கர் வரை கடன் தள்ளுபடி என்றவர் தொகைக்கு வரம்பு வைத்தார்: லட்சக்கணக்கான விவசாயிகள் ஏமாற்றம்.

1. தங்க மோதிரம் - மிகப்பெரிய ஏமாற்று:

“பிறக்கும் எல்லா குழந்தைக்கும் தங்க மோதிரம்” என்றார். இப்போது “அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைக்கு மட்டும் தான்” என்று மாற்றிவிட்டார். தமிழகத்தில் பிறக்கும் 10 லட்சம் குழந்தைகளில் 55% தனியார் மருத்துவமனையில் பிறக்கிறார்கள். அவர்களை கழித்து விட்டார். இது அரைகுறை அல்ல, முழு ஏமாற்று!



**சைதை சாதிக்**
**(கழக செய்தி தொடர்பாளர்)**

2. தங்கம் + பட்டுப்புடவை - விதிமுறைகளின் மலை:

“திருமணமாகும் எல்லா பெண்களுக்கும் 1 சவரன் தங்கம் + பட்டுப்புடவை” என்றார். இப்போது ஏகப்பட்ட விதிமுறைகள்:

- வருமான வரம்பு ரூ.2.5 லட்சத்திற்குள்
- பிறப்பிட சான்று கட்டாயம்
- திருமண சான்று கட்டாயம்
- 10-க்கும் மேற்பட்ட ஆவணங்கள்

ஆண்டுக்கு 6 லட்சம் பெண்களில் 4 லட்சம் பேருக்கு மறுப்பு. பயனாளிகள் 70% கடுமையாக குறைப்பு!

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் 100 நாள் - சாதனைக்கு சாட்சி!

விஜய் 100 நாள் - அரைகுறை ஆட்சிக்கு சாட்சி!

வாக்குறுதியில் “எல்லோருக்கும்” என்று சொல்லி ஓட்டு வாங்கி, நடைமுறையில் “தகுதியுள்ளவர்களுக்கு மட்டும்” என்று ஏமாற்றுவது தான் விஜய் ஆட்சி!

வாக்குறுதி கொடுத்து ஓட்டு வாங்குவது அரசியல், சொன்னதை செய்வதுதான் ஆட்சி - அதை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் செய்து காட்டினார்!

# மணிப்பூர் துப்பாக்கிச் சூடு!

இம்பால், ஆக. 26 -

மணிப்பூர் மாநிலம் காங்போக்பி மாவட்டம் தபவ் குக்கி கிராமத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மர்ம நபர்கள் ஒரு வீட்டுக்கு தீ வைத்ததாக கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, அருகில் உள்ள சேனாபதி மாவட்டத்தில் உள்ள நாகா தபவ் பகுதியில் அதிகாலை 4 மணியளவில் பல வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

இதையடுத்து, சி.ஆர். பி. எப். வீரர்கள் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் சம்பவ இடங்களுக்கு விரைந்து சென்று மோதலை கட்டுப்படுத்த முயன்றனர்.

எனினும் காலை 9.20 மணியளவில் தபவ் நாகா பகுதியில் மோதல் தீவிரமடைந்தது. குறிப்பாக இரு குழுக்களைச் சேர்ந்தவர்கள் பரஸ்பரம் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 54 வயதுடைய சி.ஆர். பி.எப். வீரர் ஒருவர் காயமடைந்தார்.

அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கினியாவில் விபத்து 22 பேர் பலி!

கொனாக்ரி, ஆக. 26 -

கினியா நாட்டின் தலைநகர் கொனாக்ரியின் பெஸ்ஸியா பகுதியில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் அதிகாலை 2 மணியளவில் திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது. இரவு முழுவதும் பெய்த கனமழை காரணமாக, அங்கு மலைபோல் குவிந் திருந்த குப்பை சரிந்து அருகில் இருந்த கூடாரங்கள் மற்றும் வீடுகளின் மீது விழுந்தது.

இந்த கோர விபத்தில் 30 பேர் உயிரிழந்ததுடன், 6 பேர் படுகாயமடைந்தும், 16 பேர் லேசான காயங்களுடனும் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் மீட்புப் பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

உலக வங்கியின் புள்ளி விவரங்களின்படி, நாட்டின் 1.51 கோடி மக்களில் 37 லட்சம் பேர் மிகக் குறைந்த வருமானத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கிடையே, மழைக் காலத்தில் இந்த குப்பை கிடங்கால் பெரும் ஆபத்து ஏற்படும் என்பதால், இதனைக் மூடிவிட்டு குப்பைகளை நகருக்கு வெளியே மாற்றுவதாக கினியாவின் பிரதேச நிர்வாக அமைச்சர் ஜெனாப் டுரே தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம் குடியாத்தம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் மோர்தானா இடது, வலது புற கால்வாய்களை துார்வாராத த.வெ.க. அரசைக் கண்டித்து வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கண்டன ஆர்பாட்டம் நடந்தது. வடக்கு ஒன்றிய செயலாளர் சத்யானந்தம் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. அமலு, நகராட்சி தலைவர் சவுந்தரராஜன், கே.வி.குப்பம் ஒன்றிய செயலாளர் லோ.ரவிச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் ஜி.எஸ்.அரசு, நகர துணை செயலாளர் மனோஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் த.வெ.க. அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர். ஒன்றிய செயலாளர்கள் சீதாராமன், முருகேசன், பேச்சாளர் குமரன், தலைமை பொது குழு உறுப்பினர்கள் தயாளமூர்த்தி, சக்திதாசன் ஒன்றிய அவைத்தலைவர் கே.சேகர், ஒன்றிய துணை செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, சாவித்திரி மணி, ஒன்றிய பொருளாளர் பத்ரிநாத், மாவட்டப் பிரதிநிதி ஆனந்தன், இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயபிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் ஜீவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.